# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032
முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)

*******

முறையீட்டு மனு எண்355,427 மற்றும் 442 /2016/பே
ஆணை நாள். 27–07–2018

திரு பி. செல்வராஜ்,
5 வது வார்டு முன்னாள் உறுப்பினர்,
வீரக்கல்புதூர் பேரூராட்சி,
இரட்டைபுளியமரம்,
இராமன் நகர் (அஞ்சல்)
மேட்டூர் அணை – 636 403
சேலம் மாவட்டம். –– முறையீட்டு மனுதாரர்.

1.திரு எம். வெங்கடாசலம்,
முன்னாள் பேரூராட்சி மன்றத் தலைவர்,
வீரக்கல்புதூர் பேரூராட்சி. –– எதிர் மனுதாரர் (355 மற்றும் 442/2016)

2.திரு கே.சி. பாரதி,
முன்னாள் 2வது வார்டு உறுப்பினர்,
வீரக்கல்புதூர் பேரூராட்சி. –– எதிர் மனுதாரர் (427/2016)

ஆணை.

சேலம் மாவட்டம், வீரக்கல்புதூர் பேரூராட்சி, இரட்டைபுளியமரம் பகுதியினைச் சேர்ந்த திரு P. செல்வராஜ், என்பவரது 24.1.2013 மற்றும் 01.8.2013 நாளிட்ட புகார் மனுக்கள் பேரூராட்சிகளின் இயக்குநர், சென்னை அவர்களின் கடித ந.க.எண். 12527/2013/இ.2/நாள்.21.04.2016, மற்றும் 13200/2013/இ.2/நாள் 10.05.2016ன்படி இம்முறைமன்ற நடுவத்தில் 28.4.2016 மற்றும் 17.05.2016 ஆகிய தேதிகளில் பெறப்பட்டன. மேற்படி முறையீட்டு மனுக்களுக்கு முறையீட்டு மனு எண்.355/2016 மற்றும் 442/2016 என எண்ணிடப்பட்டது.

மேற்படி மனுக்களில் முன்னாள் பேரூராட்சி தலைவர் மீது சில முறைகேடுகள் மற்றும் லஞ்சப்புகார்கள் கூறப்பட்டுள்ளன.

மேலும் மேற்படி மனுதாரரின் பிறிதொரு புகார் மனுவின் நகல் பேரூராட்சிகளின் இயக்குநரது ந.க.எண். 3461/2013/இ.2/நாள்.10.05.2016ன்படி 17.05.2016ல் இம்முறை மன்ற நடுவத்திற்கு வரப்பெற்று முறையீட்டு எண்.427/2016 என பதிவு செய்யப்பட்டுள்ளது. இதில் முன்னாள் இரண்டாவது வார்டு உறுப்பினர் மீது லஞ்சப் புகார் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முறையீட்டு மனுக்கள் தொடர்பாக செயல் அலுவலரது விளக்க அறிக்கைகள் பெறப்பட்டு விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டன.

இம்முறைமன்ற நடுவ 02.05.2016 மற்றும் 20.05.2016 ஆகிய நாளிட்ட அறிவிப்பாணைகளில் முறையீட்டு மனுதாரருக்கு தனது முறையீட்டு மனுக்களை 2015ம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் (முறையீட்டு மனுதாக்கல் வழிமுறை, விசாரணை மற்றும் இறுதி செய்தல்)விதிகள், விதி 6ன் கீழ் ரூ.10/–க்கான நீதி மன்ற வில்லைக் கட்டணத்துடனும், விதி 4ன் கீழ் உரிய படிவத்தில் (படிவம்–1) பூர்த்தி செய்து மனுவினை தொடர்புடைய அத்தாட்சி ஆவணங்களுடன் சமர்ப்பிக்க ஆணையிடப்பட்டது.

இம்முறைமன்ற நடுவ 10.01.2017ம் நாளிட்ட அழைப்பாணை மூலம் முறையீட்டு மனுதாரரின் முறையீட்டு மனுக்கள் தொடர்பாக விளக்கம் அளிக்க இம்முறைமன்ற நடுவத்தில் 22.02.2017ல் ஆஜராகத் தெரிவித்து ஆணையிடப்பட்டது. ஆனால் மனுதாரர் மேற்படி விசாரணைக்கு ஆஜராகவில்லை.

இந்நேர்வில் மேற்படி புகார் மனுக்களை விதிகளின்படி உரிய முறையில் அனுப்பத் தெரிவித்தும் முறையிட்டு மனுதாரர் அனுப்பத் தவறியுள்ளார். மேலும் மேற்படி புகார் மனுக்கள் தொடர்பாக தனது விளக்கத்தினை பதிவு செய்ய இம்முறைமன்ற நடுவத்தில் ஆஜராகத் தெரிவித்தும் முறையீட்டு மனுதாரர் ஆஜராகாததோடு அதற்கான எந்த விளக்கத்தினையும் சமர்ப்பிக்கவில்லை. மேலும் வீரக்கல்புதூர் பேரூராட்சி செயல் அலுவலர் அவர்களது 05.01.2018 மற்றும் 03.04.2018ம் நாளிட்ட கடிதங்களில் கெம்ப்ளாஸ்ட் சன்மார் (பி) லிமிடெட் தொழிற்சாலைகள், வணிக நிறுவனங்கள் மற்றும் அரசு அலுவலகங்களில் பணிபுரியும் பணியாளர்களிடமிருந்து விடுதலின்றி தொழில் வரி வசூலிக்கப்பட்டு வருகிறதென்றும், தொழிற்சாலைக் கட்டிடங்களுக்கு சொத்து வரியும் வசூலிக்கப்பட்டு வருகிறதென்றும் அறிக்கை சமர்ப்பித்துள்ளார். மேலும் புகார் மனுவில் தெரிவித்துள்ள டிராக்டர் டிரைவர் பணியிடத்திற்கு திரு.கலையரசனை பணியமர்த்த ரூ.2.00 லட்சம் லஞ்சம் கேட்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் இதுவரை மேற்படி பணியிடம் நிரப்பப்படவில்லை என்பதும்

மேற்படி நபர் எவ்வித தொகையும் தான் அளிக்கவில்லை என விசாரணையில் தெரிவித்துள்ளதையும் செயல் அலுவலர் தனது 20.07.2018ம் நாளிட்ட அறிக்கையில் சமர்ப்பித்துள்ளார். எனவே முறையீட்டு மனுதாரர் தெரிவித்துள்ள புகார்களுக்கு இம்முறைமன்ற நடுவத்தில் உரிய விளக்கம் அளிக்க மனுதாரர் ஆஜராகாத நிலையில் இப்பொருள் தொடர்பாக மனுதாரர் தரப்பில் விளக்கம் அளிக்க ஏதும் இல்லை எனக் கருதி முறையீட்டு மனுக்களை தள்ளுபடி செய்து ஆணையிடப்படுகிறது.

2018 ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 27 –ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

–//ஒப்பம்//–

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

–//உத்திரவின்படி அனுப்பப்படுகிறது//–

செயலாளர். 14/8/2018

பெறுநர்.

1. திரு பி. செல்வராஜ்,
   5 வது வார்டு முன்னாள் உறுப்பினர்,
   வீரக்கல்புதூர் பேரூராட்சி,
   இரட்டைபுளியமரம்,
   இராமன் நகர் (அஞ்சல்)
   மேட்டூர் அணை – 636 403
   சேலம் மாவட்டம்.

2. செயல் அலுவலர்,
   வீரக்கல்புதூர் பேரூராட்சி,
   சேலம் மாவட்டம்.

3. பேரூராட்சிகளின் உதவி இயக்குநர்,
   சேலம் மண்டலம்,
   மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
   சேலம்

நகல்.

பேரூராட்சிகளின் இயக்குநர்,
பேரூராட்சிகள் இயக்குநரகம்,
குறளகம், சென்னை –108.